# தீபாவளிப் பண்டிகை: கோவை மாநகரில் தற்காலிக பட்டாசு உரிமம் பெற விண்ணப்பிக்கலாம்

**கோவை, ஆக. 25:** கோவை மாநகரப் பகுதியில் வரும் நவம்பர் 8-ஆம் தேதி கொண்டாடப்படவுள்ள தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு, தற்காலிக பட்டாசு உரிமம் பெற விரும்புவோரிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக கோவை மாநகர காவல் துறை அறிவித்துள்ளது.

இதுகுறித்து கோவை மாநகர காவல் ஆணையர் அலுவலகம் தரப்பில் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:

கோவை மாநகர காவல் நிலைய எல்லைகளுக்கு உள்பட்ட பி-1 முதல் பி-5, சி-1 முதல் சி-6, ஈ-1 முதல் ஈ-3 மற்றும் டி-1 முதல் டி-6 வரையிலான காவல் நிலைய எல்லைப் பகுதிகளில் தற்காலிக பட்டாசு கடை அமைக்க விரும்பும் மனுதாரர்கள், வரும் செப்டம்பர் 1-ஆம் தேதி முதல் செப்டம்பர் 30-ஆம் தேதி மாலை 5 மணிக்குள் கோவை மாநகர காவல் ஆணையர் அலுவலகத்தில் உரிய ஆவணங்களுடன் தங்களது விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

இதற்காக, இணையதளத்தில் பதிவிறக்கம் செய்யப்பட்ட AE-5 படிவத்தில் ரூ.2 மதிப்புள்ள நீதிமன்ற வில்லை ஒட்டி, அதில் விண்ணப்பதாரரின் கடவுச்சீட்டு அளவு புகைப்படம் ஒட்ட 3 கூடுதல் புகைப்படங்களையும் தனியாக இணைத்து மனுதாரர் கையொப்பமிட்டு வழங்க வேண்டும்.

மேலும், விண்ணப்பதாரரின் ஆதார் அட்டை அல்லது குடும்ப அட்டை நகல், உரிமைக் கட்டணமாக ரூ.1,200-ஐ கருவூல வங்கியில் செலுத்தியதற்கான சலான் (இதற்கான சலான் இவ்வலுவலகத்தில் வழங்கப்படும்), பட்டாசு இருப்பு வைத்து விற்பனை செய்யப்படும் இடத்தின் முகவரி, சாலையின் பெயர், அருகிலுள்ள கட்டடங்கள் மற்றும் முக்கிய அடையாளக் குறி, டிராயிங் எண் ஆகிய விவரங்களுடன் கூடிய வரைபடம் 6 நகல்களில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

அப்படிப்பட்ட இடம் சொந்தக் கட்டடமாக இருப்பின் 2025-26-ஆம் ஆண்டுக்கான முதல் அரை ஆண்டு வரை அதாவது செப்டம்பர் 30, 2026 வரை செலுத்தப்பட்ட சொத்து வரி ரசீதும், வாடகை கட்டடமாக இருப்பின் சொத்து வரி ரசீதுடன் கட்டட உரிமையாளரின் சம்மத கடிதம் ரூ.20 மதிப்புள்ள முத்திரைத்தாளில் 2 சாட்சிகளின் முழு முகவரியுடன் கூடிய கையொப்ப சம்மதக்கடிதமுடன் இணைக்கப்பட வேண்டும்.

மாநகராட்சி, பொதுப் பணித் துறை அல்லது பிற துறை கட்டடங்களாக இருப்பின் அதுசார்ந்த அலுவலரின் மறுப்பின்மை கடிதமும், மாநகராட்சி அல்லது பஞ்சாயத்துக்கு உரிமைக் கட்டணம் செலுத்திய ரசீது, விண்ணப்பதாரரின் பெயரில் ஜிஎஸ்டி பதிவுச் சான்றிதழ் மற்றும் பான் கார்டு நகல், கடை அமையவுள்ள இடத்தின் புகைப்படங்கள் 3 ஆகியவற்றை அளிக்க வேண்டும். பட்டாசு இருப்பு வைத்து விற்பனை செய்யப்படவுள்ள இடம் 9 சதுர மீட்டருக்கு குறையாமலும், 25 சதுர மீட்டருக்கு மிகாமலும் இருக்க வேண்டும் என்பதற்கான புகைப்படமும் இணைக்கப்பட வேண்டும். மேற்கண்ட அனைத்து ஆவணங்களுடன் செப்டம்பர் 1 முதல் செப்டம்பர் 30 வரை பெறப்படும் முழுமையான விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலிக்கப்படும். அதற்கு மேல் விண்ணப்பம் சமர்ப்பிக்க காலக்கெடு நீட்டிக்கப்படாது. குறிக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் முழுமையாக பெறப்படாத விண்ணப்பங்கள் எந்தவித முன்னறிவிப்புமின்றி தள்ளுபடி செய்யப்படும்.

மேலும், சம்பந்தப்பட்ட இடங்களை நேரில் பார்வையிட்டு, விசாரணைக்குப் பின் காவல் துறையின் கண்ணோட்டத்தில் திருப்தியடையும் பட்சத்தில் மட்டுமே உரிமம் வழங்கப்படும். வெடிபொருள் சட்டப்படி துறை அறிவுரைப்படி சாலையோரக் கடைகளுக்கு உரிமம் வழங்கப்படாது. திருமண மண்டபம், சமுதாயக் கூடம் மற்றும் திரையரங்குகளில் தற்காலிக பட்டாசுக் கடை அமைக்க விதிகளில் தடையில்லை என்றாலும், வெடிபொருள் விதிகள் 2008 விதி 83 (3)-இன் படி அந்த வளாகம் 9 சதுர மீட்டருக்கு குறையாமலும் 25 சதுர மீட்டருக்கு மிகாமலும் சேமிப்புப் பகுதியாக இருக்க வேண்டும் என அதில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# வெள்ளப்பெருக்கு: கோவை குற்றாலத்தில் குளிக்கத் தடை

**கோவை, ஆக. 25:** மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் பெய்துவரும் தொடர் மழையால் ஏற்பட்ட திடீர் வெள்ளப்பெருக்கு காரணமாக, கோவை குற்றாலம் அருவி தற்காலிகமாக செவ்வாய்க்கிழமை மூடப்பட்டது.

கோவை குற்றாலம் மாவட்டத்தின் முக்கிய சுற்றுலாத் தலமாகும். இங்கு வார இறுதி நாள்களில் மற்றும் விடுமுறை நாள்களில் கோவை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும், பிற மாவட்டங்களில் இருந்தும் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வந்து செல்வது வழக்கம்.

இந்த நிலையில், கடந்த சில நாள்களாக மேற்குத் தொடர்ச்சி மலை மற்றும் போளுவாம்பட்டி வனப் பகுதிகளில் மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக கோவை குற்றாலம் அருவியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. அருவியில் ஆர்ப்பரித்து கொட்டும் தண்ணீரின் வேகம் அதிகரித்துள்ளதோடு, நீரின் வரத்து தொடர்ந்து அதிகரித்து வருவதால் பொதுமக்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளது.



கோவை குற்றாலத்தில் ஆர்ப்பரித்துக் கொட்டும் தண்ணீர்.

சுற்றுலாப் பயணிகள் யாரும் எதிர்பாராத விபத்துகளில் சிக்கிக்கொள்ளக் கூடாது என்பதற்காகவும், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகவும் வனத் துறையினர் சார்பில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, செவ்வாய்க்கிழமை (ஆக.25) முதல் கோவை குற்றாலம் தற்காலிகமாக மூடப்படுவதாகவும், அருவியில் குளிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் வனத் துறையினர் அறிவித்துள்ளனர்.

## மின் கம்பத்தில் இருசக்கர வாகனம் மோதி இளைஞர் உயிரிழப்பு

**கோவை, ஆக. 25:** கோவை வெள்ளக்கிணறு பகுதியில் சாலையோர மின் கம்பத்தின் மீது இருசக்கர வாகனம் மோதியதில் இளைஞர் உயிரிழந்தார். இருவர் காயமடைந்தனர்.

கோவை துடியலூர் வெள்ளக்கிணறு பகுதியைச் சேர்ந்த செந்தில்குமார் மகன் ரோஹித் (19). ஹட்கோ காலனியைச் சேர்ந்த விஜயனின் மகன் ஜெகுர் ரோபாஸ் (29). இவர் தனது இருசக்கர வாகனத்தில் நண்பர்களான ரோஹித், நிதின் (20) ஆகியோருடன் சென்று கொண்டிருந்தார். வெள்ளக்கிணறு வீட்டுவசதி வாரிய குடியிருப்பு என்ஜிஜிஓ காலனி சாலையில் இவர்கள் சென்று கொண்டிருந்தபோது, சாலையோரம் இருந்த மின் கம்பத்தின் மீது இவர்களது இருசக்கர வாகனம் மோதியது. இந்த விபத்தில் வாகனத்தில் பின்னால் அமர்ந்திருந்த நிதின் மற்றும் ரோஹித் ஆகியோருக்கு பலத்த காயம் ஏற்பட்டது. இவர்களில் ரோஹித் கோவை அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார். மற்ற இருவரும் காயங்களுடன் கோவை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதுகுறித்து போக்குவரத்து புலனாய்வு மேற்கு பிரிவு போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## தந்தை கார் தராததால் பொறியாளர் தற்கொலை

**கோவை, ஆக. 25:** கோவையில் வெளியூர் செல்ல தந்தை கார் தராததால், பொறியாளர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

கோவை, வேலாண்டிபாளையம் பகுதியில் உள்ள தனியார் அடுக்குமாடி குடியிருப்பில் வசிப்பவர் செந்தில்குமார். இவரது மகன் ரவிவர்மா (22). பொறியியல் பட்டதாரியான இவர், அந்தப் பகுதியில் உள்ள தனியார் நிறுவனத்தில் பணியாற்றி வந்தார்.

தனது நண்பரின் இல்ல விழாவில் பங்கேற்க காரில் செல்ல வேண்டும் என்று அவரது தந்தையிடம் கூறியுள்ளார். ஆனால், ஓட்டுநர் உரிமம் இல்லாததால் அவர் காரை தர மறுத்துள்ளார். தனக்கு ஓட்டுநர் அனுபவம் உள்ளதால் காரை கொடுக்குமாறு அவரது தந்தையிடம் வற்புறுத்தியுள்ளார்.

இருப்பினும், செந்தில்குமார் காரை கொடுக்க மறுத்து விட்டார். இதனால், மன வேதனையில் இருந்த ரவிவர்மா தனது வீட்டின் அறையில் திங்கள்கிழமை பிற்பகல் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். இதுகுறித்து சாய்பாபா காலனி போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# வால்பாறை எஸ்டேட் பகுதிகளில் புற்றுநோய் கண்டறிதல் முகாம்

## மாவட்ட ஆட்சியர் உத்தரவு



வால்பாறை நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்தாய்வு கூட்டத்தில் பேசுகிறார் மாவட்ட ஆட்சியர் பவன்குமார் க.கிரியப்பனவர்.

**வால்பாறை ,ஆக.25:** வால்பாறை எஸ்டேட் பகுதிகளில் முழுமையாக புற்றுநோய் கண்டறிதல் முகாம் நடத்த மாவட்ட ஆட்சியர் பவன்குமார் க.கிரியப்பனவர் உத்தரவிட்டார்.

வால்பாறை வட்டாரத்தில் பல்வேறு பகுதிகளில் ஆட்சியர் பவன்குமார் க.கிரியப்பனவர் செவ்வாய்க்கிழமை ஆய்வு மேற்கொண்டார். அப்போது, அட்டகட்டி வனத் துறை சோதனைச் சாவடி அருகே வனத் துறை சார்பில் புதுப்பிக்கப்பட்ட சுற்றுலாப் பயணிகளுக்கான காட்சிமுனையை திறந்து வைத்தார். பின்னர் அய்யர்பாடி எஸ்டேட் மருத்துவமனையில் நடைபெற்ற மருத்துவ முகாமை பார்வையிட்டார். இதைத் தொடர்ந்து பல்வேறு எஸ்டேட் பகுதிகளில் பழுதடைந்த நிலையில் உள்ள சாலைகளை பார்வையிட்டார். பின்னர் வால்பாறை நகராட்சி கூட்டரங்கில் அனைத்து எஸ்டேட் மேலாளர்கள் கலந்து கொண்ட கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் பவன்குமார் க.கிரியப்பனவர் பேசியதாவது:

எஸ்டேட் பகுதிகளில் பழுதடைந்த சாலைகளை சீரமைக்க நகராட்சி நிர்வாகம் தயாராக உள்ள நிலையில், சாலையை நகராட்சி வசம் ஒப்படைக்க வேண்டும்.

மனித- வன விலங்கு மோதல்களைத் தடுக்க வனத் துறையினருக்கு ஒத்துழைப்பு தர வேண்டும். அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மூலம் தற்போது புற்றுநோய் கண்டறிதல் முகாம் நடத்தப்படுகிறது.

அந்தந்த எஸ்டேட் பகுதியில் நடத்தப்படும் இந்த முகாமில் நிர்வாகத்தினர் தங்களது தொழிலாளர்களை அனுப்பிவைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

கூட்டத்தில் மாவட்ட வன அலுவலர் தேவேந்திரகுமார் மீனா, நகராட்சி ஆணையர் நித்யா, வட்டாட்சியர் அருள்முருகன் உள்பட பல்வேறு துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

## தென்னம்பாளையத்தில் கல்லால் தாக்கி இளைஞர் படுகொலை

### ஒருவர் சரண்

**சூலூர், ஆக.25:** சூலூர் அருகே தென்னம்பாளையம் பகுதியில் கைப்பேசி தர மறுத்ததால் கல்லால் தாக்கி இளைஞர் படுகொலை செய்யப்பட்டார். இது தொடர்பாக சூலூர் காவல் நிலையத்தில் ஒருவர் சரணடைந்தார்.

சூலூர் அருகே தென்னம்பாளையம் பகுதியில் தங்கி கூலி வேலை செய்து வந்த தூத்துக்குடி பகுதியைச் சேர்ந்த சங்கமேஸ்வரன் (29) என்பவர் சூலூர் காவல் நிலையத்தில் செவ்வாய்க்கிழமை சரணடைந்தார். அப்போது, தென்னம்பாளையம் பகுதியில் ஒருவரை கொலை செய்துவிட்டதாக போலீஸாரிடம் அவர் தெரிவித்தார். உடனடியாக சூலூர் காவல் ஆய்வாளர் பிரேம் ஆனந்த் மற்றும் போலீஸார் சங்கமேஸ்வரனை கொலை நடைபெற்ற இடத்துக்கு அழைத்துச் சென்றனர்.

அப்பகுதி நீலாம்பூர் காவல் நிலைய எல்லைக்கு உள்பட்டதால் அவரை, நீலாம்பூர் காவல் ஆய்வாளர் தியாகராஜனிடம் ஒப்படைத்தனர். இதையடுத்து, போலீஸார் இறந்தவரின் சடலத்தை கைப்பற்றி உடற்கூறாய்வுக்காக இஎஸ்ஐ மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

பின்னர் அவரிடம் விசாரணை நடத்தினர். அப்போது, தன்னுடன் மது அருந்த வந்தவரிடம் கைப்பேசி கேட்டதாகவும், அவர் தர மறுத்ததால் ஏற்பட்ட வாக்குவாதத்தில் அவரை கல்லால் தாக்கி கொலை செய்ததாகவும், இறந்தவர் யார் என்பது தனக்கு தெரியாது என்றும் தெரிவித்துள்ளார்.

இது குறித்து போலீஸார் வழக்குப் பதிவு செய்து கொலை செய்யப்பட்டவர் யார் என்பது குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.


செண்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா
सेन्ट्रल बैंक ऑफ़ इंडिया
Central Bank of India
CENTRAL TO YOU SINCE 1911
மண்டல அலுவலகம் : 14/15, வெரைட்டி ஹால் ரோடு, கோவை - 641 001

அடையாள சுவாதீனம் அடிப்படையில்
மாபெரும் மின்னணு ஏல அறிவிப்பு
(E-Auction Notice)
(SARFAESI சட்டம் 2002–ன் கீழ்)

**SARFAESI** சட்டம் **2002**, மற்றும் அதன் பிரிவு 13 (4) ன் கீழ் அதிகாரம் பெற்ற சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா வங்கி அதிகாரி பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் சொத்துக்களை கீழ்க்கண்ட தேதிகளில் அடையாள சுவாதீனம் எடுத்திருந்தார். இதனைத்தொடர்ந்து கீழ்க்கண்ட தேதிகளில் மேற்கண்ட சட்டத்தின் பிரிவு 13(2)ன் கீழ் பின்வரும் கடன் கணக்குகளில் கீழ்க்கண்டவாறு விவரிக்கப்பட்டுள்ள வங்கிக்கு வர வேண்டிய கடன் நிலுவைத் தொகைகளை வட்டியுடன் வசூலிக்கும் விதமாக பட்டியலில் கண்டுள்ள சொத்துக்களை விற்பனை செய்யும் உரிமையுடன் கூடிய கேட்பு அறிவிப்பினை அனுப்பியிருந்தார். ஆனால் கடன்தாரர் / உத்தரவாதம் அளித்தவர் / அடமானம் வைத்தவர் கடன் நிலுவைத் தொகைகளை திருப்பிச் செலுத்த தவறியதால், இதன்கீழ் கையொப்பமிட்ட அதிகாரி மேலே குறிப்பிட்ட சட்டத்தின் பிரிவு 13 (4) (a) மற்றும் விதி 8 மற்றும் 9 ன் கீழ், தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழ்க்கண்ட சொத்துக்களை விற்பனை செய்வதன் மூலம் வங்கிக்கு வர வேண்டிய நிலுவைத் தொகைகளை வசூல் செய்திட உள்ளார். இதன்கீழ் கையொப்பமிட்ட அதிகாரியின் மூலமாக **https://baanknet.com** என்ற இணையதளத்தின் வாயிலாக மின்னணு ஏல முறையில் விற்பனை நடைபெறும்.

**கிளை : கிராஸ்கட் ரோடு கிளை. கடன் கணக்கின் பெயர் : கடன் பெற்றவர் : M/s.தனுஷ் ஹோண்டா, கூட்டாண்மை நிறுவனம்,** 1140, சத்தி ரோடு, டெக்ஸ்டூல் எதிரில், கணபதி, கோயம்புத்தூர் – 641006. **பங்குதாரர்கள் மற்றும் உத்திரவாதம் அளித்தவர்கள் : (1) திருமதி.S.கார்த்திகா, க/பெ.திரு.செல்வகுமார்,** 217, டீ எஸ்டேட் ரோடு, ரேஸ் கோர்ஸ், கோயம்புத்தூர் தெற்கு, கோயம்புத்தூர் – 641018. **(2) திரு.செல்வகுமார்,** 217, டீ எஸ்டேட் ரோடு, ரேஸ் கோர்ஸ், கோயம்புத்தூர் தெற்கு, கோயம்புத்தூர் – 641018.

**கடன் பெற்றவர் : M/s.ஆதித்யா யமஹா ஆட்டோஸ், கூட்டாண்மை நிறுவனம்,** 21/22, திருச்சி சாலை, சிங்காநல்லூர், கோயம்புத்தூர் – 641005. **பங்குதாரர்கள் மற்றும் உத்திரவாதம் அளித்தவர்கள் : (1) திருமதி.S.கார்த்திகா, க/பெ.திரு.செல்வகுமார்,** 217, டீ எஸ்டேட் ரோடு, ரேஸ் கோர்ஸ், கோயம்புத்தூர் தெற்கு, கோயம்புத்தூர் – 641018. **(2) திரு.அருண் குமார், த/பெ.திரு.செல்வகுமார்,** 217, டீ எஸ்டேட் ரோடு, ரேஸ் கோர்ஸ், கோயம்புத்தூர் தெற்கு, கோயம்புத்தூர் – 641018. **உத்திரவாதம் அளித்தவர் : திரு.செல்வகுமார்,** 217, டீ எஸ்டேட் ரோடு, ரேஸ் கோர்ஸ், கோயம்புத்தூர் தெற்கு, கோயம்புத்தூர் – 641018.

**கடன் பெற்றவர் : M/s.ஆதித்யா ஆட்டோ பார்ட்ஸ் கம்பெனி, உரிமையாளர் : திருமதி.S.கார்த்திகா, க/பெ.திரு.செல்வகுமார்,** 4/10, CI சிவானந்தா மில் ரோடு, அத்திப்பாளையம் பிரிவு, கணபதி, கோயம்புத்தூர் – 641035. **உரிமையாளர் மற்றும் உத்திரவாதம் அளித்தவர் : திருமதி.S.கார்த்திகா, க/பெ.திரு.செல்வகுமார்,** 217, டீ எஸ்டேட் ரோடு, ரேஸ் கோர்ஸ், கோயம்புத்தூர் தெற்கு, கோயம்புத்தூர் – 641018. **உத்திரவாதம் அளித்தவர்கள் : (1) திரு.செல்வகுமார்,** 217, டீ எஸ்டேட் ரோடு, ரேஸ் கோர்ஸ், கோயம்புத்தூர் தெற்கு, கோயம்புத்தூர் –641018. **(2) திரு.அருண் குமார், த/பெ.திரு.செல்வகுமார்,** 217, டீ எஸ்டேட் ரோடு, ரேஸ் கோர்ஸ், கோயம்புத்தூர் தெற்கு, கோயம்புத்தூர் – 641018.

**கடன் நிலுவைத் தொகை : 20.08.2026 வரையில் ரூ.18,79,66,767.48 (M/s.ஆதித்யா யமஹா ஆட்டோஸ் - ரூ.7,22,76,392.33 + M/s.தனுஷ் ஹோண்டா – ரூ.4,98,81,367.31 + M/s.ஆதித்யா ஆட்டோ பார்ட்ஸ் கம்பெனி – ரூ.6,58,09,007.84) மற்றும் வட்டி, ஏனைய கட்டணங்கள் சேர்த்து. கேட்பு அறிவிப்பு தேதி : 20.07.2023 & 01.08.2023. அடையாள சுவாதீனம் எடுக்கப்பட்ட தேதி : 16.10.2023 & 17.10.2023.**

**சொத்து விபரம் : சொத்து 1 :** கோயம்புத்தூர் தாலுக்கா,சரவணம்பட்டி கிராமம், V K V ஸ்ரீ குமரகுரு நகர், சைட் எண்.4, பட்டா எண்.991, SF No 37/1-ல் 17246 சதுர அடியில் உள்ள ஈடு காட்டப்பட்டுள்ள 40 சென்ட் குடியிருப்பு மற்றும் தொழிற்சாலை மனையிடம் திருமதி.S.கார்த்திகா அவர்களின் பெயரில் உள்ளது (01.09.2008 தேதியிட்டசொத்து உரிமைப் பத்திரம் 5961/2008 வாயிலாக) . சொத்தின் எல்லைகள் : வடக்கில் SF No: 37/2-ல் திரு.வெங்கிடுசாமி மற்றும் ஏனையோருக்கு சொந்தமாக உள்ள நிலங்கள், கிழக்கில் SF No: 37/2-ல் பார்த்தசாரதி, ஆனந்த்பாரதி மற்றும் ஏனையோருக்கு சொந்தமாக உள்ள நிலம், தெற்கில் கீரணத்தம் தார் சாலை சாலையிலிருந்து செல்லும் 45 லிங்க்ஸ் (30 அடி) கிழமேல் வண்டித்தடம், மேற்கில் சரோஜினி, சத்தியானந்தன் மற்றும் ஏனையோருக்கு சொந்தமான SF No. 37/1. **காப்பு விலை : ரூ.3,80,00,000/-. முன்வைப்புத் தொகை : ரூ.38,00,000/-. ஏலம் உயர்த்திக்கோரும் தொகை : ரூ.1,00,000/-.**

**சொத்து 2 :** கோயம்புத்தூர் தாலுக்கா, சிங்காநல்லூர் கிராமம், இருகூர் சாலை, ஒண்டிப்புதூர், கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைப்பகுதிக்குள், SF No 215/4A-ல் ஈடு காட்டப்பட்டுள்ள காலி குடியிருப்பு நிலம் (அயிட்டம் எண்.1 – 10 சென்ட் (4356 சதுரடி) மற்றும் அயிட்டம் எண்.2 - 15 சென்ட் (6534 சதுரடி) மொத்தம் 22.92 சென்ட் (9986.00 சதுரடி) சகிதமாக திருமதி.S.கார்த்திகா அவர்களின் பெயரில் உள்ளது (18.02.2008 தேதியிட்ட சொத்து உரிமைப் பத்திரம் 1291/2008 வாயிலாக). **அயிட்டம் எண்.1 : 10 சென்ட் (4356 சதுரடி) :** இருகூர் இட்டேரி சாலைக்கு வடக்கு, ராஜம்மாள் அவர்களின் சொத்துக்கு தெற்கு, பழனிசாமி அவர்களின் சொத்துக்கு கிழக்கு, SF No 215/4B-ல் உள்ள மணி அவர்களுக்கு சொந்தமான சொத்துக்கு மேற்கு. **அயிட்டம் எண்.2 : 15 சென்ட் (6534 சதுரடி)** : K.செல்வராஜ் என்பவரின் சொத்திற்கு வடக்கு, ரயில்வே புறம்போக்கு நிலத்திற்கு தெற்கு, பழனிசாமி என்பவரின் சொத்திற்கு கிழக்கு, மணி என்பவருக்கு சொந்தமான SF No. 215/4B–ல் உள்ள சொத்திற்கு மேற்கு. மொத்தம் 25.00 சென்ட் அல்லது 10890.00 சதுரடி. **காப்பு விலை : ரூ.2,08,60,000/-. முன்வைப்புத் தொகை : ரூ.20,86,000/-. ஏலம் உயர்த்திக்கோரும் தொகை : ரூ.1,00,000/-.**

**சொத்து 3 :** , கோவை மாநகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ள, கோவை – 641012, டாடாபாத், டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை, சைட் எண்: 82 பாகம், கதவு எண்கள் 498, 499, 500 மற்றும் 501, SF No.188, TS No.11/444 ஆகிய முகவரியில் உள்ள ஈடு காட்டப்பட்டுள்ள குடியிருப்பு மற்றும் வணிகச் சொத்து திரு.P.செல்வகுமார் அவர்களின் பெயரில் உள்ளது. இச்சொத்தின் எல்லைகள் பின்வருமாறு: சைட் எண். 82–ல் உள்ள நவமணி அவர்களின் வீட்டிற்கு வடக்கு, திரு.ஜெயக்குமார் அவர்களுக்கு சொந்தமான சைட் எண்: 82 பாகத்திற்கு தெற்கு, சைட் எண் 81–ல் உள்ள துரை ராமச்சந்திரன் அவர்களின் வீடு மற்றும் நிலச் சொத்துக்களுக்கு கிழக்கு, மனை எண் 82–ல் உள்ள கிழக்கு, தெற்கு-வடக்காகச் செல்லும் 6 அடி பொதுப் பாதைக்கு மேற்கு. அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்து திருமதி.S.கார்த்திகா அவர்களின் பெயரில் உள்ளது. **காப்பு விலை : ரூ.1,46,25,000/-. முன்வைப்புத் தொகை : ரூ.14,62,500/-. ஏலம் உயர்த்திக்கோரும் தொகை : ரூ.1,00,000/-.**

**சொத்து 4 :** 6.31 சென்ட் அல்லது 2750 சதுரடி அளவுள்ள நிலம் மற்றும் மூன்று அடுக்கு குடியிருப்பு கட்டிடம் ஆனது TS No 1384/3 பாகம், பிளாக் எண்.32, சைட் எண். 22-B பாகம், கதவு எண்.217, பழைய கதவு எண்.159A, டீ எஸ்டேட் சாலை, ரேஸ் கோர்ஸ், கோவை என்ற முகவரியில் திருமதி.S.கார்த்திகா அவர்களின் பெயரில் உள்ளது. சொத்தின் எல்லைகள் : வடக்கில் 45 அடி அகலமுள்ள ATD சாலை, தெற்கில் சந்திரா டெக்ஸ்டைல் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு சொந்தமான சொத்து, கிழக்கில் சைட் எண்.28–ல் மீதமுள்ள விஸ்தீரணம், மேற்கில் சந்திரா டெக்ஸ்டைல் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு சொந்தமான சொத்து. அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்து திருமதி.S.கார்த்திகா அவர்களின் பெயரில் உள்ளது. **காப்பு விலை : ரூ.7,43,50,000/-. முன்வைப்புத் தொகை : ரூ.74,35,000/-. ஏலம் உயர்த்திக்கோரும் தொகை : ரூ.1,00,000/-.**

**ஏலம் நடைபெறும் தேதி : 28.09.2026. ஏலம் நடைபெறும் நேரம் : காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை 10 நிமிட கால நீட்டிப்புடன் .** சொத்தினை பார்வையிடும் தேதி : **அனைத்து வேலை நாட்களிலும் 17.09.2026 முதல் 23.09.2026 தேதி வரையில் காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரையில் கிளை மேலாளரின் முன் அனுமதி பெற்று பார்வையிடலாம். முன்வைப்புத் தொகை செலுத்த கடைசி தேதி : 28.09.2026 மாலை 4.00 மணி வரை. சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா, கிராஸ்கட் ரோடு கிளை, முதன்மை மேலாளர் மொபைல் எண்.8489903061, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி / முதன்மை மேலாளர் (RO) : Mob No : 8489903057**

**நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் : 1.** ஏல விற்பனை ஆன்லைன் மின்னணு ஏலம் / ஏலம் கோருதல் என்ற முறையில் **https://baanknet.com** என்ற இணையதளத்தின் வாயிலாக மேற்குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்தில் (ஏலம் முடிவுக்கு வரும் வரையில் 10 நிமிடம் கால நீட்டிப்புடன்) நடைபெறும். **2.** ஏல விண்ணப்பங்களை ஆன்லைன் முறையில் **28.09.2026,** மாலை **4.00** மணி அளவிலோ அல்லது அதற்கு முன்பாகவோ சமர்ப்பிக்க வேண்டும். **3.**மின்னணு ஏல விற்பனையானது **"எப்படி எங்கு உள்ளனவோ அதே நிலையில்"** என்ற அடிப்படையில் நடைபெறும். **4.** விருப்பமுள்ள ஏலதாரர்கள் மின்னணு ஏல நடவடிக்கைகளில் கலந்து கொள்ளுதல் மற்றும் ஏல விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் ஆகியவற்றுக்கு முன்பாக **https://baanknet.com** என்ற இணையதளத்திற்கு சென்று முழு விபரங்களுடன் கூடிய நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை அறிந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். **5.** வெற்றிபெற்ற ஏலதாரர் / சொத்தினை வாங்குபவர், வருமான வரிச் சட்டம் 1961-ன் உட்பிரிவு 194 IAன் பிரகாரம் ரூ.50.00 லட்சம் மற்றும் அதற்கு மேலான மதிப்பினை உடைய அசையாச் சொத்துக்களின் விற்பனை நடைமுறைகளில் 1% TDS தொகையினை செலுத்த வேண்டும். இத்தொகையினை படிவம் 26QB ல் சலான் (Challan) பூர்த்தி செய்து செலுத்தியதன் பின்னர் அதற்கான TDS சான்றிதழின் அசல் இரசீதினை வங்கியில் சமர்ப்பிக்க வேண்டும். **6.** மேலும் சொத்து தொடர்பான விபரங்களை அறிய **சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா, கிராஸ்கட் ரோடு கிளை, முதன்மை மேலாளர் Mob No : 8489903061, முதன்மை மேலாளர் (RO) : Mob No : 8489903057, சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா, மண்டல அலுவலகம், கோயம்புத்தூர், மின்னஞ்சல் முகவரி :recvcoimro@centralbank.co.in,** அவர்களை அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும். ஏலதாரர் மேற்கண்ட இணையதளத்தில் பதிவு செய்து கொண்ட பின்னர், விருப்பமுள்ள ஏலதாரர் / சொத்தினை வாங்குபவர் பின்வரும் ஆவணங்களை ஏல விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கும் கடைசி தேதிக்கு முன்பாக இணைய தளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும். 1) NEFT/RTGS சலான் ஆகியவற்றின் நகல், 2) PAN கார்டு நகல், 3) அடையாளச் சான்று (KYC) சுய சான்றளிக்கப்பட்ட வாக்காளர் அடையாள அட்டை / ஓட்டுனர் உரிமம் / பாஸ்போர்ட், 4) முகவரிச் சான்று, மேற்கண்ட ஆவணங்களை பதிவேற்றம் செய்யாவிடில் ஏல விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதை அறியவும்.

**தேதி : 20.08.2026**
**இடம் : கோயம்புத்தூர்**

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
**சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா**



SBI
**வீட்டுக் கடன் மையம்-CBE North (61040)**
குறிஞ்சி காம்ப்ளக்ஸ், ஸ்டேட் பாங்க் ரோடு,
கோயம்புத்தூர் - 641018, தமிழ்நாடு.
போன் : 0422 2309001, 2309011,
மொபைல் : 89038 80077, மின்னஞ்சல் : sbi.61040@sbi.co.in

**கையகப்படுத்துதலுக்கான அறிவிப்பு**

**(விதி-8(1) (அசையா சொத்து குறித்து)**

கடனீட்டுச் சொத்துக்களை பிணையமாக்கல் மற்றும் மறு சீரமைத்தல் மற்றும் பிணைய நலன் அமலாக்க சட்டம், 2002 (2002–ன் எண் 54) கீழ் மற்றும் பிரிவு 13(2), பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002ன் விதி 3ன் கீழ் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் கீழேகையொப்பம் செய்துள்ள **பாரத ஸ்டேட் பாங்கு,** அதிகாரம் பெற்ற அலுவலர் அவர்கள், **கடன்தாரர் : விண்ணப்பத்தின் படி கடன்தாரரின் வசிப்பிட முகவரி : திருமதி.P. நிர்மலா,** க/பெ.திரு.U.M. நடராஜன், எண்.27, தண்ணீர் பந்தல் III, விளாங்குறிச்சி ரோடு, B.R. புரம், பீளமேடு, கோயம்புத்தூர் – 641 004, **விண்ணப்பத்தின் படி சார்–கடன்தாரரின் வசிப்பிட முகவரி : திரு.U.M. நடராஜன்,** த/பெ.திரு.V. முத்துசாமி, எண்.27, தண்ணீர் பந்தல் III, விளாங்குறிச்சி ரோடு, B.R. புரம், பீளமேடு, கோயம்புத்தூர் – 641 004, **விண்ணப்பத்தின் படி கடன்தாரரின் அலுவலக முகவரி : திருமதி.P. நிர்மலா,** க/பெ.திரு.U.M. நடராஜன், எண்.27, தண்ணீர் பந்தல் III, விளாங்குறிச்சி ரோடு, B.R. புரம், பீளமேடு, கோயம்புத்தூர் – 641 004, **விண்ணப்பத்தின் படி சார்–கடன்தாரரின் அலுவலக முகவரி : திரு.U.M. நடராஜன்,** த/பெ.திரு.V. முத்துசாமி, எண்.26–1, தண்ணீர் பந்தல் III, விளாங்குறிச்சி ரோடு, B.R. புரம், பீளமேடு, கோயம்புத்தூர் – 641 004, **கடன்தாரரின் சொத்து முகவரி : திருமதி.P. நிர்மலா,** க/பெ.திரு.U.M. நடராஜன், கதவு எண்.49/16, விவேகானந்தா நகர், I.O.B. காலனி, பாரதியார் பல்கலைக்கழகம் (அஞ்சல்), கோயம்புத்தூர் – **641 046, சார்–கடன்தாரரின் சொத்து முகவரி : திரு.U.M. நடராஜன்,** த/பெ.திரு.V. முத்துசாமி, கதவு எண்.49/16, விவேகானந்தா நகர், I.O.B. காலனி, பாரதியார் பல்கலைக்கழகம் (அஞ்சல்), கோயம்புத்தூர் – 641046 **(HTL கணக்கு எண்.62143116705)** நிலுவைத் தொகை **ரூ.23,88,261/– (ரூபாய் இருபத்து மூன்று லட்சத்து எண்பத்து எட்டாயிரத்து இருநூற்று அறுபத்து ஒன்று மட்டும்) 08.06.2026 தேதி அன்று** மேற்கண்ட கடனாளிகள், மேற்கண்ட கடன் நிலுவைத் தொகை மற்றும் அதன் வட்டியும், செலவுகளையும், கட்டணங்களையும் இந்த அறிவிப்பு நாளிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்தக் கோரி **09.06.2026** தேதியன்று கேட்பு அறிவிப்பு அனுப்பியிருந்தார்.

கடன் பெற்றவர்கள் மேற்கண்ட கடன் நிலுவைத் தொகையினைச் செலுத்தத் தவறியதால், வங்கியின் அதிகாரம் பெற்ற அலுவலர் மேற்குறிப்பிட்ட சட்டங்களின் பிரிவு 13(4) விதி 8 மற்றும் 9–ன் கீழ் **24.08.2026** தேதியன்று கீழ்க்கண்ட சொத்தினை **அடையாள** கையகப்படுத்தியுள்ளார் என்பதை கடன் பெற்றவர்/உத்தரவாதமளித்தவர் மற்றும் பொது மக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக கடன் பெற்றவர்(கள்)/உத்தரவாதமளித்தவர் மற்றும் பொது மக்கள் கீழ்க்கண்ட சொத்தின் மீது எந்த விதமான நடவடிக்கையும் மேற்கொள்ளக்கூடாது என எச்சரிக்கப்படுவதுடன், அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளும்பட்சத்தில் **பாரத ஸ்டேட் பாங்குவிற்கு** கடனாளிகள் செலுத்த வேண்டிய கடன் நிலுவைத் தொகை **ரூ.24,34,459/– (ரூபாய் இருபத்து நான்கு லட்சத்து முப்பத்து நான்காயிரத்து நானூற்று ஐம்பத்து ஒன்பது மட்டும்) 23.08.2026 தேதி அன்று** மற்றும் பின்வட்டி, கட்டணங்களையும், இதர செலவுத் தொகையும் செலுத்த நேரிடும் என்பதை அறியவும்.

பிணையம் வைக்கப்பட்டுள்ள சொத்துக்களை மீட்பதில் கிடைக்கும் கால அவகாசத்தைக் கருத்தில் கொள்ளுமாறு சட்டப்பிரிவு 13(8)ன் நிபந்தனைகளுக்கு கடன் வாங்கியவர்கள்/உத்தரவாதமளித்தவர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

**அசையாச் சொத்து விபரம்**

**திரு.U.M. நடராஜன் மனைவி திருமதி.P. நிர்மலா பெயரிலுள்ள சொத்து (ஆவண எண்.4032/2010) :** கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், கோயம்புத்தூர் வடவள்ளி சார் பதிவு மாவட்டம், கோயம்புத்தூர் தாலூகா, வடவள்ளி வருவாய் கிராம க.ச. எண்.317ல் உள்ள 1.79 ஏக்கர் நிலம் வீட்டுமனைகளாக மாற்றப்பட்டு, கோயம்புத்தூர் – பெரியார் – நீலகிரி மண்டல முதுநிலை மற்றும் ஊரகத் திட்டமிடல் துறை துணை இயக்குநர் கடிதம் எண்.LP/R (CPN) 33/85ல் அங்கீகரிக்கப்பட்ட மனை எண்.49ன் **எல்லைகளும், அளவுகளும் கீழ்வருமாறு :** கிழக்கே : க.ச. எண்.462ல் உள்ள வீட்டுமனைகள், மேற்கே : 40 அடி அகல தென்வடல் லேஅவுட் ரோடு, வடக்கே : மனை எண்.50, தெற்கே : க.ச. எண்.373ல் உள்ள மனை எண்.8. **அளவுகள் :** கிழமேல் 60 அடி 3 அங்குலம் வடபுறம், கிழமேல் 75 அடி தென்புறம், தென்வடல் 29 அடி 3 அங்குலம் கிழபுறம், தென்வடல் 68 அடி மேல்புறம். மேற்படி மனை 2985 சதுர அடி (அல்லது) 6.85 சென்ட் வீட்டு மனையுடன் 2850 சதுர அடி தரைத் தளம் மற்றும் முதல் தளத்துடன் கூடிய RCC கட்டிடமும், அனைத்து வசதிகள் முதலியனவும் லேஅவுட் ரோடுகளின் பொது உபயோக உரிமையும் சேர்ந்த சொத்து. கதவு எண்.49, விவேகானந்தா நகர், I.O.B. காலனி, சொத்து வரிவிதிப்பு எண்.2988, மின் இணைப்பு எண்.474, குடிநீர் இணைப்பு எண்.758 (B), மேற்படி சொத்து வடவள்ளி பேரூராட்சி எல்லைக்குள் அமைந்துள்ளது.

**தேதி : 24.08.2026**
**இடம் : கோயம்புத்தூர்**

அதிகாரம் பெற்ற அலுவலர்
பாரத ஸ்டேட் பாங்கு



**சென்னை உயர்நீதிமன்றம்**
**(குற்றவியல் அசல் நீதிப் பேராணை அதிகார வரம்பு)**
**Crl.M.P. No.23150 of 2025**
**in**
**Crl.R.C.SR. No.50301 of 2025**
**in**
**Crl.M.P. No.32625 of 2022**
**(கோயம்புத்தூர் 6–வது நீதித்துறை நடுவர் நீதிமன்ற ஆவணங்களின் படி)**

பாரத ஸ்டேட் வங்கி,
பிரதிநிதியாக அதன் கிளை மேலாளர்,
திரு.தினேஷ். E, நஞ்சுண்டாபுரம் கிளை, கோயம்புத்தூர்.
... மனுதாரர்/மனுதாரர்/மனுதாரர்
–எதிர்–
**S. ஸ்ரீதர்,** த/பெ. ஸ்ரீராமலு, எண்.4, JM நிலா ஹவுஸ், 1வது குறுக்கு விரிவாக்கம், மேற்கு மீனா எஸ்டேட், கோயம்புத்தூர். ... எதிர்மனுதாரர்/எதிர்மனுதாரர்/எதிர்மனுதாரர்

சென்னையில் உள்ள மாண்பமை உயர் நீதிமன்றம், கோயம்புத்தூர் 6–வது நீதித் துறை நடுவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட **குற்றவியல் த.ம. எண்.32625/2022** வழக்கில் **23.06.2024** தேதியிட்ட உத்தரவை எதிர்த்து, குற்றவியல் சீராய்வு **மனு. சீ. எண்.50301/2025** தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 690 நாட்கள் தாமதத்தை மன்னிக்க கோரி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில், உமக்கு செய்தித்தாள் மூலமாக மாற்று முறையில் சம்மன்/நோட்டீஸ் அனுப்புவதற்கு அனுமதி வழங்கி, **28.07.2026** தேதியன்று **குற்றவியல் த.ம. எண்.23150/2025** வழக்கில் ஓர் உத்தரவு பிறப்பித்துள்ளது. மேலும் உமக்கு எதிரான குற்றவியல் சீராய்வு வழக்கில் பின்வரும் நிவாரணங்கள் கோரப்பட்டுள்ளன.

அ. கோயம்புத்தூர் 6–வது நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தால் குற்றவியல் **த.ம. எண்.32625/2022–ல் 23.06.2024** அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவை ரத்து செய்யவும், அதன் விளைவாக மனுதாரர் அளித்த புகாரின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை (FIR) பதிவு செய்ய காவல்துறைக்கு உத்தரவிடவும், மேலும் இந்த வழக்கின் சூழ்நிலைகள் மற்றும் உண்மைகளின் படி மாண்பமை நீதிமன்றம் தகுந்ததெனக் கருதும் பிற உத்தரவுகளைப் பிறப்பித்து நீதி வழங்குமாறும் கோரப்படுகிறது.

அறிவிப்பு : மேற்கண்ட வழக்கு மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தில் **08.09.2026** அன்று விசாரணைக்கு வருகிறது என்பதை இதன் மூலம் உங்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது. குறிப்பிட்டபட்ட அத்தேதியில் **காலை 10.30 மணி**யளவில் தாங்களாகவோ அல்லது உங்களது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகும் படி இதன் மூலம் அழைக்கப்படுகிறீர்கள். தவறினால், உங்கள் ஆஜராகாத நிலையில் வழக்கு விசாரிக்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்படும்.

மனுதாரருக்கான அனைத்து நோட்டீஸ்கள் மற்றும் நடைமுறைகளை அனுப்புவதற்கான முகவரி அவர்களின் வழக்கறிஞர்களான நித்யேஷ் நடராஜ், வைபவ் R வெங்கடேஷ் மற்றும் அனிருத் A ஸ்ரீராம் ஆகும். அலுவலக முகவரி : புதிய எண்.23, H–5/6, பாரி வீதி, கலாசேத்ரா காலனி, பெசன்ட் நகர், சென்னை–600090, தமிழ்நாடு, இந்தியா.

**நித்யேஷ் நடராஜ்,**
**மனுதாரருக்கான வழக்கறிஞர்,**
சட்ட அலுவலகம் : H-9/1, கம்பர் தெரு, கலாசேத்ரா காலனி, பெசன்ட் நகர், சென்னை – 90, தமிழ்நாடு,
**போன் : +91 44–42738778, +91 44–43180011,**
மின்னஞ்சல் : nandv.law@gmail.com